தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 6

ந.க.எண்: 047393 /எம்1/இ1/2025 நாள்:04.08.2026

| | | |
|---|---|---|
| பொருள் | : | பள்ளிக் கல்வி – போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு – 11.08.2026 அன்று நடைபெறவுள்ள போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வு – நேரம் தெரிவிப்பு – சார்ந்து. |
| பார்வை | : | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 6 ந.க.எண்: 047393 /எம்1/இ1/2025 நாள்: 28.07.2026 |

பார்வையில் காணும் செயல்முறைகளின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வானது 11.08.2026 அன்று காலை 10.00 மணிக்கு அனைத்து வகைப் பள்ளிகளிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வினை 11.08.2026 அன்று காலை 10.00 மணிக்கு தவறாது நடத்திட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உடனடியாகத் தெரிவித்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

04/08/26

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

அனைத்து மாவட்டம்.

# போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

# PLEDGE AGAINST DRUG ABUSE

I am aware of the ill effects of drug abuse and I solemnly promise not to indulge in drug abuse. I also swear my sincere contribution to prevent and advise my family members and friends not to fall into the habit of drug abuse. I assure to fully contribute for the cause of rescuing and guiding the drug abusers to give up drugs.

I will fully stand with the Government in their fight against the usage, consumption, and manufacturing of illegal narcotic substances in order to eradicate them from Tamil Nadu. I affirm to contribute with utmost dedication towards the growth of the State and welfare of its people.

Thank You.